# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 148/மா/2025**

**நாள்: 11.03.2026**

A.S. மோகன்
சென்னை–44 --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
தாம்பரம் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 044, குரோம்பேட்டை, தி.சு. லட்சுமணன் நகர், முதல் தெரு, கதவு எண் 8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. S. மோகன் என்பவரின் 08.04.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.04.2025 அன்று பெறப்பட்டு 148/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 044, குரோம்பேட்டை, தி.சு. லட்சுமணன் நகர், முதல் தெரு, கதவு எண் 8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. S. மோகன் என்பவர் தனது 08.04.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> "செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட 27 வார்டு பகுதியில் அமைந்துள்ள தி.சு.லட்சுமணன் நகர், 2வது தெருவில் சர்வே எண் பழைய எண் 404, T.S.No.404/1B கிராம நத்தம் மனையில் சுமார் 1 கிரவுண்ட் மனையில் ஒரு பொது கிணறு இருந்து வந்தது. இந்த பொது கிணறு பொது மக்களின் நீர் ஆதாரமாக இருந்த வந்த நிலையில் மேற்படி பொது கிணற்றின் தண்ணீர் கெட்டுப் போனதின் காரணமாக, அப்போதைய பல்லாவரம் நகராட்சி நிர்வாகம் மேற்கண்ட கிணற்றை மூடிவிட்டு நீர்நிலை பகுதியான பொது கிணறு முக்கியத்துவம் கருதி மேற்படி பொது கிணறு இருந்த இடத்தை அப்போதைய பல்லாவரம் நகராட்சி தற்போது தாம்பரம் மாநகராட்சி மூலம் கையகப்படுத்தப்பட்டு, மேற்படி பொது கிணறு இருந்த இடத்தில் சுற்றுசுவர் அமைக்க கடந்த 30.09.2003 அன்று நகர மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் எண் 889 ஆகும். அதன் தீர்மான நகல் இத்துடன் இணைத்துள்ளேன்.

இவ்வாறான நிலையில், தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–II அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பொது கிணற்றின் இடத்தை N.ரவி என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இது சம்பந்தமாக மனுதாரர் பொது கிணறு இருந்த இடத்தின் ஆக்கிரமிப்பை அகற்றி அந்த இடத்தில் தாம்பரம் மாநகராட்சி மூலம் R.O. பிளாண்ட் (சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்) அமைத்து தருமாறு கேட்டுக் கொண்டு கடந்த 08.04.2023, 24.05.2023 அன்று உயர்திரு ஆணையர், தாம்பரம் மாநகராட்சி, சென்னை–600 045 அவர்களிடம் பதிவு தபால் மூலம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனுவை கொடுத்துள்ளேன். அதன் நகல் இத்துடன் இணைத்துள்ளேன்.

மேற்படி பொது கிணறு ஆக்கிரமிப்பை நகரமைப்பு அலுவலர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–II அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற மேற்படி பொது கிணறு இருந்த இடத்தை நகரளவு ஆவணங்களின்படி அளவீடு செய்து தருமாறு உயர்திரு வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம், குரோம்பேட்டை, சென்னை–600 044 அவர்களுக்கு உயர்திரு. ஆணையாளர், தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம், சென்னை–600 045 அவர்களால் பரிந்துரைக் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. ந.க. எண் 2241/2023/எப்1 நாள் 26.04.2024 ஆகும்.

இதுவரையிலான மேல்நடவடிக்கை எடுத்து வந்த நிலையில், இதுவரை பொது கிணறு இருந்த இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றாமல் இதுவரை எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு உடந்தையாக இருந்து வருவதாக மனுதாரர் கருதுகிறார்.

மேற்படி பொது கிணறு ஆக்கிரமிப்பு செய்துள்ள N.ரவி என்பவரின் சகோதரி G.செல்வகுமாரி க/பெ கணேசன் (லேட்) என்பவர், மேற்படி பொது கிணறு இருந்த இடத்தை தன்னுடைய வீட்டோடு சேர்த்து ஆக்கிரமிப்பு செய்யும் வகையில் உள்நோக்குடன் தனக்கு சொந்தமான இடம் 30 X 41 என்ற அதன் எல்லைகளாக தன் வீட்டோடு சேர்த்து பொது கிணறு இருந்த இடத்தை சுற்றியுள்ள எல்லைகளை அத்துகாட்டி மாண்புமிகு உரிமையியல் நீதிமன்றம், ஆலந்தூர், சென்னை–600 016ல் Exparty Order பெற்றுள்ளார். அதாவது அவர் குறிப்பிடும் 30 X 41 அளவு இடம் அவருக்கு சொந்தமானால் மீதமுள்ள இடம் பொது கிணறு இருந்த இடத்திற்கு சொந்தமானதாகும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்துகிறேன்.

எனவே தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்றம் நடுவர் அவர்கள் நீர்நிலைகள் இருந்த இடத்தை பாதுகாக்க உரிய மேல்நடவடிக்கை எடுக்க மாண்புமிகு உயர்நீதிமன்றம், சென்னை–104 அவர்களின் உத்தரவுப்படி (W.P. No.22163/2018) நீர்நிலை பகுதியின் நீர் ஆதாரமாக இருந்தவந்த பொது கிணறு இருந்த இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பை தாம்பரம் மாநகராட்சி அதிகாரங்களை பயன்படுத்தி பொது கிணறு இருந்த இடத்தில் ஆக்கிரமிப்பை அகற்றி, மேற்படி இடத்தில் தாம்பரம் மாநகராட்சி மூலம் R.O. (சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்) பிளாண்ட் அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர எதிர்மனுதாரர்களுக்கு உரிய ஆணையை பிறப்பிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 13.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 23.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 2241/2023/எப்1 நாள் 21.01.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"மனுதாரரால் கடிதத்தினை தொடர்ந்து இடம் நேராய்வு செய்யப்பட்டது. இவ்விடம் ஜமீன் பல்லாவரம் கிராமம் சர்வே எண் 404 பகுதி ஆனது வருவாய் ஆவணங்களில் அப்துல் சலாம் சாயுபு பெயரில் தாக்கலாகி உள்ளது. அப்பகுதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக சுமார் 500–க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருகின்றனர்.

மேற்படி மனுதாரர் குறிப்பிட்டுள்ள பொது கிணறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடமானதும் அப்துல் சலாம் சாயுபு பெயரிலேயே தாக்கலாகி உள்ளது. தற்போது நிலவரப்படி அவ்விடத்தில் கிணறு இருந்தது போல் எந்தவித அறிகுறியும் இல்லை.

மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள இடமானது தனி நபர் பட்டா இடத்தில் அமைகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 23.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.27ல் தி.சு.லட்சுமணன் நகர், 2வது தெரு, சர்வே எண்.404, T.S.No,404/1B கிராம நத்தம் மனையில் சுமார் 1 கிரவுண்டில் பொது கிணறு இருந்தது. கிணற்றை சுற்றி கம்பி வேலி மற்றும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு பல்லாவரம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்தது. அக்கிணறு அங்கு குடியிருக்கும் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு நீர் ஆதாரமாக இருந்த நிலையில், அதனை சரியாக பராமரிக்காத காரணத்தினால், பல்லாவரம் நகராட்சி அக்கிணற்றை மூடிவிட்டனர். ஆனால் அப்போதைய பல்லாவரம் நகராட்சியால் கிணறு இருந்த இடத்தில் சுற்று சுவர் கட்ட 30.09.2003ல் நகர மன்றத்தில் தீர்மானம் எண்.889 நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதனை செயல்படுத்தவில்லை.

தற்போது திரு.N.ரவியின் சகோதரி G.செல்வகுமாரி பொது கிணறு இருந்த இடத்தை தன்னுடைய வீட்டோடு சேர்த்து ஆக்கிரமிப்பு செய்து 30 X 41 அதன் எல்லைகளாக காட்டி மாண்புமிகு உரிமையியல் நீதிமன்றம், ஆலந்தூர், சென்னை–16ல் Exparty Order பெற்றுக் கொண்டு 30 X 41 சதுரடி அவருக்கு சொந்தமாக்கியதால் அதில் உள்ள பொது கிணற்றையும் சேர்த்து ஆக்கிரமித்துள்ளார். கிணற்றை சுற்றி அவருக்கு சொந்தமாகும்.

இன்றைய விசாரணையில் தாம்பரம் மாநகராட்சி சார்பாக ஆஜரான உதவிப்பொறியாளர் தெரிவித்த லட்சுமணன் நகர் பகுதி அப்துல் சாயபு என்ற பெயரில் பட்டா உள்ளது என்று குறிப்பிட்டார். திரு.அப்துல் சாயபு பெயரில் இருந்தாலும் இந்தியா பாக்கிஸ்தான் போரின் போது பாக்கிஸ்தான் சென்றுவிட்டார். தற்போது அவர் இந்தியாவில் இல்லை.

எனவே, மேற்கண்ட ஆக்கிரமிக்கப்பட்ட கிணற்றை மீட்டு தாம்பரம் மாநகராட்சி மூலம் R.O. (சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்) பிளாண்ட் அமைத்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்கும்படி இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்."

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் 23.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள இடம் நேராய்வு செய்யப்பட்டது. இவ்விடம் ஜமீன் பல்லாவரம் கிராமம் சர்வே எண்.404 பகுதியானது வருவாய் ஆவணங்களில் அப்துல் சலாம் சாயபு பெயரில் தாக்கலாகி உள்ளது. அப்பகுதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக சுமார் 500க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருகின்றனர். மேற்கண்ட பகுதி அப்துல் சாயபு என்ற பெயரில் உள்ளதற்கான Extract From the Town Survey and Land Register நகலினை இம்முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பொது கிணறு ஆக்கிரப்பு செய்யப்பட்டுள்ள இடமானது அப்துல் சலாம் சாயபு பெயரிலேயே தாக்கலாகி உள்ளது. தற்போது நிலவரப்படி அவ்விடத்தில் கிணறு இருந்தது போல் எந்தவித அறிகுறியும் இல்லை.

எனவே, புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள இடமானது தனி நபர் பட்டா இடத்தில் உள்ளதால் அவ்விடத்தை வருவாய் துறையினர் மூலம் அளவீடு செய்து கிணறு உள்ள பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்ற விவரத்தினை அறிந்து அது குறித்த விளக்கத்தினை அளிக்க வேறொரு தேதி வழங்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.”

7. எனவே, எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 13.02.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.02.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டு, அதன் நகல் மனுதாரருக்கும் அனுப்பப்பட்டது.

8. இந்நிலையில், முறைமன்ற நடுவ கடிதம் முறையீட்டு மனு எண் 148/மா/2025–6 நாள் 04.02.2026 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரிடம் கீழ்க்கண்ட விவரங்கள் கோரப்பட்டது.

“தங்களது முறையீட்டு மனு தொடர்பாக 23.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் தாங்கள் அளித்த வாக்குமூலத்தில், திரு.N.ரவியின் சகோதரி G.செல்வகுமாரி என்பவர் பொது கிணறு இருந்த இடத்தை தன்னுடைய வீட்டோடு சேர்த்து ஆக்கிரமிப்பு செய்து 30 X 41 அதன் எல்லைகளாக காட்டி சென்னை–16, ஆலந்தூர், மாண்புமிகு உரிமையியல் நீதிமன்றத்தின் Exparty Order–னை பெற்றுக் கொண்டு 30 X 41 சதுரடி அவருக்கு சொந்தமாக்கியதால், அதில் உள்ள கிணற்றையும் சேர்த்து ஆக்கிரமித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

2. எனவே, மேற்கண்ட உரிமையியல் நீதிமன்றத்தின் Exparty Order-ன் நகலினை இம்முறைமன்ற நடுவத்தின் மேல்நடவடிக்கைக்காக உடன் அனுப்பி வைக்குமாறு தங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.”

9. மேற்கண்ட கடிதத்திற்கான பதில் மனுதாரரிடமிருந்து இதுநாள் வரை கிடைக்கப் பெறவில்லை.

10. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி உதவி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 2241/2023/எப்1 நாள் 12.02.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

“செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், ஜமீன் பல்லாவரம் கிராமம், தி.சு. லட்சுமணன் நகர் 2வது தெருவில் உள்ள பொது கிணறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என புகார் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, இவ்வலுவலக கடிதம் 10.06.2024 மற்றும் 28.01.2026 நாளிட்ட கடிதத்தில் வரைபடத்துடன் கூடிய அறிக்கை வழங்கக் கோரி வட்டாட்சியர் பல்லாவரம் வட்டம், அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அதனை தொடர்ந்து, பல்லாவரம் வட்டாட்சியரின் 11.02.2026 நாளிட்ட கடிதத்தில், மேற்படி ஜமீன் பல்லாவரம் கிராமம், வார்டு E நகர புல எண் 6 ஆனது, திரு. அப்துல் சாயுபு என்பவர் பெயரில் உள்ளது எனவும், மேற்படி புலத்தில் தற்போது கிணறு ஏதும் இல்லை. தனி நபர் பெயரில் பட்டா உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம் அவர்களின் கடிதம், நகர சார் ஆய்வாளர் அறிக்கை மற்றும் வரைபடம், இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.’’ எனத் தெரிவித்துள்ளார்.

11. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் (திட்டம்) 13.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“23.01.2026 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் என்னால் அளிக்கப்பட்ட வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக பின்வரும் விவரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் புகார் தொடர்பாக 10.06.2024 மற்றும் 28.01.2026 நாளிட்ட கடிதங்களில் வரைபடத்துடன் கூடிய அறிக்கை வழங்கக் கோரி வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம் அவர்களுக்கு தாம்பரம் மாநகராட்சியால் கடிதம் அனுப்பப்பட்டது.

வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம் அவர்கள் 11.02.2026 நாளிட்ட கடிதத்தில், மேற்படி ஜமீன் பல்லாவரம் கிராமம், வார்டு E நகர புல எண்.6 ஆனது திரு.அப்துல் சாயுபு என்பவர் பெயரில் உள்ளது எனவும், மேற்படி புலத்தில் தற்போது கிணறு ஏதும் இல்லை என்றும் தனிநபர் பெயரில் பட்டா உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வட்டாட்சியர், பல்லாவரம் வட்டம் அவர்களின் கடிதம், வரைபடம் நகல் ஆகியவற்றை இம்முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன்.’’

12 முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் (திட்டம்) வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.27ல் தி.சு.லட்சுமணன் நகர், 2வது தெரு, சர்வே எண்.404, T.S.No,404/1B கிராம நத்தம் மனையில் சுமார் 1 கிரவுண்டில் இருந்த பொது கிணற்றினைச் சுற்றி கம்பி வேலி மற்றும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு பல்லாவரம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்தது என்பதும், அக்கிணறு அங்கு குடியிருக்கும் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு நீர் ஆதாரமாக இருந்த நிலையில், அதனை சரியாக பராமரிக்காத காரணத்தினால், பல்லாவரம் நகராட்சி அக்கிணற்றை மூடிவிட்டனர் என்பதும், ஆனால் அப்போதைய பல்லாவரம் நகராட்சியால் கிணறு இருந்த இடத்தில் சுற்று சுவர் கட்ட 30.09.2003ல் நகர மன்றத்தில் தீர்மானம் எண்.889 நிறைவேற்றப்பட்டதனை

செயல்படுத்தவில்லை என்பதும், தற்போது திரு.N.ரவியின் சகோதரி G.செல்வகுமாரி பொது கிணறு இருந்த இடத்தை தன்னுடைய வீட்டோடு சேர்த்து ஆக்கிரமிப்பு செய்து 30 X 41 அதன் எல்லைகளாக காட்டி மாண்புமிகு உரிமையியல் நீதிமன்றம், ஆலந்தூர், சென்னை–16ல் Exparty Order பெற்றுக் கொண்டு, சொந்தமாக்கியதால் அதில் உள்ள பொது கிணற்றையும் சேர்த்து ஆக்கிரமித்துள்ளார் என்பதும், கிணற்றை சுற்றி அவருக்கு சொந்தமாகும் என்பதும், 23.01.2026 விசாரணையில் தாம்பரம் மாநகராட்சி சார்பாக ஆஜரான உதவிப்பொறியாளர், லட்சுமணன் நகர் பகுதி அப்துல் சாயபு என்ற பெயரில் பட்டா உள்ளது என தெரிவித்திருந்தாலும், தற்போது அவர் இந்தியாவில் இல்லை மற்றும் இந்தியா பாகிஸ்தான் போரின் போது பாகிஸ்தான் சென்றுவிட்டார் என்பதும், மேற்கண்ட ஆக்கிரமிக்கப்பட்ட கிணற்றை மீட்டு தாம்பரம் மாநகராட்சி மூலம் R.O. (சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்) பிளாண்ட் அமைத்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்கும்படி கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் ஆக்கிரப்பு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள பொது கிணறு இடம் தாம்பரம் மாநகராட்சியால் நேராய்வு செய்யப்பட்டதில், இவ்விடம் ஜமீன் பல்லாவரம் கிராமம் சர்வே எண்.404 பகுதியானது வருவாய் ஆவணங்களில் அப்துல் சலாம் சாயபு பெயரில் தாக்கலாகி உள்ளது என்பதும், அப்பகுதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக சுமார் 500க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருகின்றனர் என்பதும், மேற்கண்ட பகுதி அப்துல் சாயபு என்ற பெயரில் உள்ளதற்கான Extract From the Town Survey and Land Register நகலினை இம்முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், தற்போது நிலவரப்படி அவ்விடத்தில் கிணறு இருந்தது போல் எந்தவித அறிகுறியும் இல்லை என்பதும், மனுதாரர் புகார் தொடர்பாக வரைபடத்துடன் கூடிய அறிக்கையினை அனுப்புமாறு பல்லாவரம் வட்டம், வட்டாட்சியரை தாம்பரம் மாநகராட்சியால் கோரப்பட்டதற்கு, மேற்படி ஜமீன் பல்லாவரம் கிராமம், வார்டு E நகர புல எண்.6 ஆனது திரு.அப்துல் சாயுபு என்பவர் பெயரில் உள்ளது எனவும், மேற்படி புலத்தில் தற்போது கிணறு ஏதும் இல்லை என்றும் தனிநபர் பெயரில் பட்டா உள்ளது என பல்லாவரம் வட்டம் வட்டாட்சியரால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சியின் ஆணையாளர் மற்றும் மண்டலம்–II–ன் உதவி ஆணையாளர் ஆகியோரின் அறிக்கைகள் மற்றும் உதவிப் பொறியாளர் (திட்டம்) வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரால் ஜமீன் பல்லாவரம் கிராமம், தி.சு. லட்சுமணன் நகர் 2வது தெரு, வார்டு எண் 27, பழைய சர்வே எண் 404 T.S.No.404/1B கிராம நத்தம் மனையில் பொது கிணறு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பொது கிணற்றுக்கு சுற்றுச் சுவர் அமைப்பதற்கு பல்லாவரம் நகராட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பல்லாவரம் வட்டம் வட்டாட்சியரின் கடிதத்தின் அடிப்படையில், தாம்பரம் மாநகராட்சியின் அறிக்கைகள் மற்றும் உதவிப் பொறியாளரின் (திட்டம்) வாக்குமூலத்தில், மேற்கண்ட இடமானது திரு. அப்துல் சாயுபு என்பவரின் பெயரில் தனிப்பட்டா உள்ளது எனவும், மேற்படி புலத்தில் தற்போது கிணறு ஏதும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர், திரு. அப்துல் சாயுபு என்பவர் தற்போது இந்தியாவில் இல்லை என்றும், இந்தியா–பாகிஸ்தான் போரின் போது பாகிஸ்தான் சென்று விட்டார் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால், வட்டாட்சியரின் அறிக்கையில் அது குறித்த தெளிவுரை ஏதுமில்லாததால் புகாரில் குறிப்பிட்ட இடம் Enemy Property Act, 1968–ன்படி ‘எதிரி சொத்து’ என்ற வரையறைக்குள்

வருமா என்பது குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் அறிய இயலவில்லை. Enemy Property Act, 1968–ன்படி எதிரி சொத்தானது CEPI (Custodian of Enemy Property for India) மூலம் நிர்வகிக்கப்படும் என்பதால், இந்நேர்வின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு உதவி ஆணையர் நிலையில் ஒரு அலுவலரை நியமனம் செய்து, வருவாய் துறையுடன் இணைந்து மேற்கண்ட இடத்தினை புலத் தணிக்கை செய்தும், நில ஆவணங்களை ஆய்வு செய்ததன் அடிப்படையிலும் உரிய நடவடிக்கை எடுத்திட தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. A.S. மோகன்,
8, முதல் தெரு, தி.சு. லட்சுமணன் நகர்,
குரோம்பேட்டை,
சென்னை–600 044.

(2) ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு,
தாம்பரம் மேற்கு,
சென்னை–600 045.

(3) உதவி ஆணையர்,
மண்டலம்–2
தாம்பரம் மாநகராட்சி,
சென்னை–600 044.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.